THASILDAR - NOC

அனுப்புநர்
திருமதி.எல்.சாந்தி,
வட்டாட்சியர்,
உத்திரமேரூர்.

பெறுநர்
மாவட்ட ஆட்சித் தலைவர்
காஞ்சிபுரம்
..........................உரிய வழிமுறையாக
சார் ஆட்சியர்,
காஞ்சிபுரம்.

9/7/19

ந.க.1203/2019/அ1 நாள். .07.2019

அய்யா,

பொருள் : தடையில்லாச் சான்று - காஞ்சிபுரம் மாவட்டம் - உத்திரமேரூர் வட்டம் - அரும்புலியூர் குறுவட்டம் - நெ.104, மாம்பாக்கம் கிராமம் - கார்டியன் இன்டர்நேஷனல் பள்ளி தாளாளர் திரு.சார்டோ ராஜேந்திரன் - CBSE பள்ளி துவங்குவதற்கு அனுமதி கோரி மனு செய்தது தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பித்தல் - தொடர்பாக.

பார்வை : வருவாய் ஆய்வாளர் அரும்புலியூர் அறிக்கை உ.மு.105/2019 நாள்.08.04.2019

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், நெ.104.மாம்பாக்கம் கிராமத்தில் கார்டியன் இன்டர்நேஷனல் பள்ளி புதியதாக துவங்குவதற்கு அதன் தாளாளர் திரு.சார்டோ ராஜேந்திரன் அவர்கள் மனு செய்தது தொடர்பாக விசாரணை செய்து எனதறிக்கையினை கீழ்காணுமாறு சமர்ப்பிக்கிறேன்.

உத்திரமேரூர் வட்டம், அரும்புலியூர் குறுவட்டத்தில் உள்ள நெ.104, மாம்பாக்கம் கிராமத்தில் நன்செய் புல எண்கள்.36/1-0.57.5 ஏர்ஸ், 36/2-0.14.0 ஏர்ஸ், 36/3B-0.26.5 ஏர்ஸ், 37/4-0.50.0 ஏர்ஸ் ஆக மொத்தம் 1.87.5 ஹெக்டேர் நிலம் கார்டியன் பவுண்டேஷன் என்ற பெயரில் பட்டா எண்.52-ல் தாக்கலாகிவருகிறது. இதில் தார்சாலையை ஒட்டி அமைந்துள்ள புல எண்.36/3A-0.36.5 ஏர்ஸ் நிலத்தில் தற்போது தென்னந்தோப்பு உள்ளது. பிற புல எண்களில் பயிர் ஏதும் செய்யப்படாமல் கடந்த 5 ஆண்டுகளாக கரம்பாக உள்ளது என தெரியவருகிறது.

மேற்படி நிலத்தினை திரு.சார்டோ ராஜேந்திரன் என்பவர் புல எண்.37/3A-0.26.5 ஏர்ஸ் நிலத்தினை ஆவண எண்.108/2010, நாள்.11.02.2010-ன் படி திரு.தேவராஜ் என்பவரிடமிருந்து கிரையமாக பெற்றுள்ளார். மேலும், புல எண்கள்.36/1-0.57.5 ஏர்ஸ், 36/2-0.14.0 ஏர்ஸ், 36/3A-0.39.5 ஏர்ஸ், 37/4-0.50.0 ஏர்ஸ் ஆகியவற்றினை ஆவண எண்.107/2010, நாள்.11.02.2010-ன் படி VENDOR SOCIETY AND PURCHASER TRUST என்பவரிடமிருந்து கிரையமாக பெற்றுள்ளார். மேற்படி கார்டியன் பவுண்டேஷன் நிர்வாக அறங்காவலர் திரு.சார்டோ இருதயராஜ் என்பவர் தார்சாலையை ஒட்டி அமைந்துள்ள புல எண்.36/3A-0.36.5 ஏர்ஸில் இருபது அடி அகலத்திற்கு பாதை அமைத்து புல எண்கள்.36/1, 36/2, 37/3A, 37/4 ஆகியவற்றை உள்ளடக்கிய 1.48.0 ஹெக்டேர் பரப்பில் CBSE பள்ளி தொடங்க உள்ளதாகவும், இதற்கு தடையில்லாச் சான்று வழங்கக்கோரி மனுச் செய்துள்ளார்.

Handed Over to Sub Collector Office
KANCHIPURAM

## புலத்தணிக்கைக்குறிப்பு

| | | |
|---|---|---|
| வட்டம் | : | உத்திரமேரூர் |
| கிராமம் | : | நெ.104, மாம்பாக்கம் |
| புல எண் | | புல எண்.36/1 மற்றும் சில |
| புலத்தணிக்கை அலுவலர் | : | வட்டாட்சியர், உத்திரமேரூர் |
| புலத்தணிக்கை நாள் | : | 29 .04.2019 |

............

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், அரும்புலியூர் குறுவட்டம், நெ.104,மாம்பாக்கம் கிராமம் திரு.சார்டோ ராஜேந்திரன் என்பவர் மாம்பாக்கம் கிராமத்தில் கார்டியன் இன்டர்நேஷனல் பள்ளி புதியதாக துவங்குவதற்கு தடையின்மைச் சான்று வழங்க கோரியது இன்று (29.04.2019) என்னால் புலத்தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி புலத்தணிக்கையின் போது அரும்புலியூர் வருவாய் ஆய்வாளர், மாம்பாக்கம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

உத்திரமேரூர் வட்டம், அரும்புலியூர் குறுவட்டத்தில் உள்ள நெ.104. மாம்பாக்கம் கிராமத்தில் நன்செய் புல எண்கள்.36/1-0.57.5 ஏர்ஸ், 36/2-0.14.0 ஏர்ஸ், 36/3B-0.26.5 ஏர்ஸ், 37/4-0.50.0 ஏர்ஸ் ஆக மொத்தம் 1.87.5 ஹெக்டேர் நிலம் கார்டியன் பவுண்டேஷன் என்ற பெயரில் பட்டா எண்.52-ல் தாக்கலாகிவருகிறது. இதில் தார்சாலையை ஒட்டி அமைந்துள்ள புல எண்.36/3ஏ-0.36.5 ஏர்ஸ் நிலத்தில் தற்போது தென்னந்தோப்பு உள்ளது. பிற புல எண்களில் பயிர் ஏதும் செய்யப்படாமல் கடந்த 5 ஆண்டுகளாக கரம்பாக உள்ளது என தெரியவருகிறது.

மேற்படி நிலத்தினை திரு.சார்டோ ராஜேந்திரன் என்பவர் புல எண்.37/3A-0.26.5 ஏர்ஸ் நிலத்தினை ஆவண எண்.108/2010, நாள்.11.02.2010-ன் படி திரு.தேவராஜ் என்பவரிடமிருந்து கிரையமாக பெற்றுள்ளார். மேலும், புல எண்கள்.36/1-0.57.5 ஏர்ஸ், 36/2-0.14.0 ஏர்ஸ், 36/3A-0.39.5 ஏர்ஸ், 37/4-0.50.0 ஏர்ஸ் ஆகியவற்றினை ஆவண எண்.107/2010. நாள்.11.02.2010-ன் படி VENDOR SOCIETY AND PURCHASER TRUST என்பவரிடமிருந்து கிரையமாக பெற்றுள்ளார். மேற்படி கார்டியன் பவுண்டேஷன் நிர்வாக அறங்காவலர் திரு.சார்டோ இருதயராஜ் என்பவர் தார்சாலையை ஒட்டி அமைந்துள்ள புல எண்.36/3A-0.36.5 ஏர்ஸில் இருபது அடி அகலத்திற்கு பாதை அமைத்து புல எண்கள்.36.1, 36/2, 37/3A, 37/4 ஆகியவற்றை உள்ளடக்கிய 1.48.0 ஹெக்டேர் பரப்பில் CBSE பள்ளி தொடங்க உள்ளதாகவும், இதற்கு தடையில்லாச் சான்று வழங்கக்கோரி மனு செய்துள்ளதும் தெரியவருகிறது. மனுதாரர் மேற்படி பள்ளி அமைப்பதற்கான வரைபடம் சமர்ப்பித்துள்ளார். இதில் பள்ளிக்கட்டடம், விளையாட்டு மைதானம், கழிப்பறை முதலியனவற்றிற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. கிரையப்பத்திர நகல், வில்லங்க சான்று நகல் முதலியனவற்றை சமர்ப்பித்துள்ளார். மேலும் மேற்படி நிலத்தின் மீது வில்லங்கம் ஏதுமில்லை என்றும், நீதிமன்ற வழக்குகள் ஏதுமில்லை என்றும் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பள்ளி துவங்க தடையில்லா சான்று வழங்க பரிந்துரை செய்கிறேன்.

(signature) 2/5/19
வட்டாட்சியர்,
உத்திரமேரூர்.

மனுதாரர் மேற்படி பள்ளி அமைப்பதற்கான வரைபடம் சமர்ப்பித்துள்ளார். இதில் பள்ளிக்கட்டட, விளையாட்டு மைதானம், கழிப்பறை முதலியனவற்றிற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. கிரையப்பத்திர நகல், வில்லங்க சான்று நகல் முதலியனவற்றை சமர்ப்பித்துள்ளார். மேலும் மேற்படி நிலத்தின் மீது வில்லங்கம் ஏதுமில்லை என்றும், நீதிமன்ற வழக்குகள் ஏதுமில்லை என்றும் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பள்ளி துவங்க தடையில்லா சான்று வழங்க பரிந்துரை செய்கிறேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள

வட்டாட்சியர் 5/7/19
உத்திரமேரூர்

5/7/19